Subscription.
Inland: Rs. 50/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
188, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 06,13 OCTOBER 1989 No. 40, 41
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## ★ Navaly Church.

The members of the Navaly Church have been working hard for several months to start a Day Care Centre for children of poor families from the village. A considerable sum of money was spent to provide addition to the Parish Hall to house the Day Care Centre. The formal opening of the Centre took place on Tuesday, the 4th of October at 9-00 a. m. when the Bishop of the Diocese declared open and dedicated the Centre. The Rev. V. N. Tharmakulasingham and Mr. W. N. Thevakadadcham assisted in the dedication service. Mr. C. Jeyaratnam the Treasurer of the Church who personally supervised the building work and the organisation of the Day Care Centre thanked all those who helped and thanked the Diocese on behalf of the Navaly Church for starting this great ministry for the poor in their midst.

## ● News from our partners in the Rhode Island Conference.

1. The United Church of Christ Committee on Persons with Disabilities gave an award to Newman Congregational Church at the General Synod 17 in Port Worth, Texas, this summer. It is the church pastored by the Rev. David Shire, who with his wife Caldy, were here for three months in early 1983.

2. Charlotte Gosselink of Providence, Rhode Island, has been named moderator of the UCC General Synod for a two-year term. Mrs. Gosselink has also been in the forefront of the JDCSI-Rhode Island Conference partnership.

## ♣ The Rev. Samuel Eliathamby Remembered.

On October 2nd, 1989, the Rev. D. C. Ratnasingham, the Presbyter of the Uduvil Church conducted a service of thanksgiving at *the Reverend Eliathamby Home* at Manipay Road, Uduvil to mark the 68th death anniversary of the Minister of the Church of the American Mission, who saw 31 years of service at the Uduvil Church(1890—1921)

The children of the Girls' Home, enlivened the service by the singing of special songs. The Litany of Thanksgiving, was led by the Rev. D. C. Ratnasingham

In the course of his sermon the Rev. D. C. Ratnasingam said that the early history, of the Uduvil Church had in it the indelible imprint of two pastors:. One was an American Missionary and the other was a Tamil national. The missionary was the Rev. Levi Spaulding who worked for 40 years at Uduvil and the national was the Rev. Samuel Eliathamby who spent 31 years (1890—1921) as Pastor at the Uduvil Church. The Rev. Eliathamby not merely built up on missionary foundations but was of great assistance to the missionaries in laying the foundations in certain areas of mission work. The choice of a site for the Inuvil Mcleod Hospital and the purchase of the land were among the great contributions the Rev. Eliathamby made to American Mission endeavours at that time. The Rev. Eliathamby also by his involvement in the life of the general community was able to integrate the various activities of the church in the suburbs of Uduvil-*Erlalai, Sanguveli, Kanterodai* etc - etc into one unit in which the Pastor, the missionary, the catechist and the bible woman, each had a share in making the Uduvil Church, luring force in the village.

The 'Eliathamb'y Home', the gift of the Rev. Eliathamby's grandson- Mr. Selwyn Eliathamby to the JDCSI now in its premises, a Girls' Home, a Sewing Centre for learners, and a Montessori School for the underfive children. Two members of the Rev. Eliathamby family have been closely associated with the JDCSI. *The Rev. D. P. Eliathamby* a son was Presbyter of the JDCSI for many years and served in various churches, including Uduvil. *Mrs. Raju*, a daughter of the Rev. Eliathamby was for many years associated with the Udupiddy Girls' College run by the Mission.

The grand daughters of the Rev S Eliathamby Grace Raju (Vic Principal, Uduvil Girls' College) Belle Raju (Mrs. S. P. Amarasingham and Shanti Eliathamby (Mrs. Rajanayagam) were at various times associated with Uduvil Girls' College.

## ※ Ten years of Mission, South of Elephant Pass.

Busloads of people arrived at Kilinochi from Jaffna on the morning of 6th Oct. 89. to share with residents South of Eleph.-nt Pass in the celebration of ten years of work in their midst, by the J.D.C.S.I. Flags waved and welcomed these people from Jaffna. The Church stood in all its touching simplicity. wide open to let the morning sun and the worshippers in.

The young and the old - all residents beyond Elephant Pass participated in the Service - leading in the litany and praise, little voices piping and young voices lifted in exultant song. The Bishop preached the sermon on the text... Acts 1:8 A significant part of the morning's event was the welcoming of the Bishop - the strength and tower behind the work done beyond Elephant Pass - and his wife, to the Celebrations. Also significant was the inauguration of the Workers' Association, an off spring of the Diocesan projects beyond Elephant Pass.

Symbolic of further growth and branching out far and wide of the mission in these areas was the tree planting ceremony which was conducted after the service. The Bishop and Dr. Robert Porter a Missionary from the U.C.B.W.M. planted a mahogany tree each, on the Church premises.

The crowd then visited the different booths in which items were colourfully, tastefully displayed for sale. The auctioneer's voice raised high to lure more and more bidders together with the hustle and bustle in the stalls were an indication of the high quality of the products - endeavour of the various rehabilitation centres and projects of the area.

The spirit of love and total commitment with which the pastors and their wives serving in these Churches is to be greatly admired. - The Rev. and Mrs. Jeyanesan, The Rev. and Mrs. Thiyagarajah, The Rev. and Mrs. Anukoolan, The Rev. and Mrs. Sooriakumar, Mr. and Mrs. Thevarajh, Mr. Jerome Paul, Mr. Anton Saverimuthu and Mr. J. Sinnathurai. Those gathered there viewing the development and the tremendous progress made in these areas realised with awe that they were participants in a great event in *the* history of the J.D.C.S.I.

Regaled by the luncheon and the spiritual nourishment they had received in partaking in this event, those from Jaffna packed into the buses bound for home.

## ★ St. Thomas' Day at Konavil.

St. Thomas' Church at Konavil which is one of the more recent C. S. I. congregations started in the Kilinochchi District celebrated its second anniversary on St Thomas' Day the 6th of October, 1989. The members of the congregation had tastefully decorated the Church compound contributing to the festive spirit. The centre began to be organised around a few Syrian Christian families from the C. S. I. Dioceses in Kerala who had settled in that area several years ago. Now there is a growing congregation in that village. The Day Care Centre has more than seventy children attending the centre daily.

The anniversary celebrations took the form of a Holy Communion Service at 7-30 a. m., celebrated by the Bishop of the Diocese. The preacher was the Rev. Daniel S. Thiagarajah who had also for a year worked in that area. The Rev. Thiagarajah referred to the faith proclaimed by Thomas when he encountered the Risen Lord, "My Lord and My God". He went on to urge that faith should result in the believers, in a new focus of loyalties, a new scale of values and a new life style. There were about 300 who participated in the function. A fellowship breakfast followed the service. Almost all who participated at this function left soon to join the Tenth Anniversary Celebrations of the Diocese's mission outreach South of Elephant Pass which followed at 10-00 a.m. at the Church of Christ the King, Kilinochchi.

## CORRECTION.

We regret an error in our report on *The Women's Consultation* which appeared in our issue of 29-9-89 — Para 3: Line 3. The speaker referred to is a lady Advocate Mrs. Ramani Natarajan who spoke on Women and Legal Rights.

## ● October Meeting — 42nd Annual Diocesan Festival.

Yet another October Festival was held at the Cathedral the following day - 7th of October, '89. The long journey made the previous day did not deter the J. D. C. S. I. ers from participating in the October Meeting. The guests at the meeting were the Rt. Rev. and Mrs. William Moses, Bishop of Coimbotore Diocese. The festival started with a Worship Service. The Rt. Rev. Moses preached his sermon.

The Chavakachcheri and the Tellipallai churches enriched the services by rendering "specials".

The variety entertainment by Jaffna College, the Vaddukkodai, Tellipallai, Chavakachcheri and Nunavil parishes, was a programme of colour and quality. There was a thunderous applause when Mrs. Moses took the microphone and her deep

( see page 8 )

## Dr. (Mrs.) Rajani Thiranagama nee Rajasingam.

Dr. Rajani, Thiranagama Head of the Department of Anatomy University of Jaffna was assasinated by unknown gunmen on the 21st September Thursday evening near the Faculty of Medicine on her return from work.

The body was kept at the Faculty of Medicine and the University on Friday with the students taking it in procession. It was brought by the students in procession from Tinnevely to Nallur where the funeral took place on Saturday 23rd September "in her ancestral home. She was also the Treasurer of the University Chapel (St. Thomas Church).

Tributes were made by the Vice-Chancellor the Deans of Medicine, Science, Arts, & the Students Unions, Medical Students of the University and Mr. A. Kadirgamar. The Bishop of Jaffna The Rt. Rev. D. J. Ambalavanar preached at the funeral service and the Rev. Isaac Selvaratnam, performed the rites assisted by the Rev. Dev Anandarajan, and the Rev. J. Sarvananthan. An Appreciation appears else where on this paper.

She leaves behind her husband Mr. Thiranagama, two daughters, her three sisters and her parents Mr. & Mrs. A. Rajasingham to mourn her loss.

*Tributes paid by :*

### 1. Rajan Hoole.

23rd September 1989.

Dr. Rajani fell victim to an assassin, a young lady and a mother of two little girls. She wanted to work for the improvement of this community and returned with her doctorate barely 3 years ago. We know how difficult it is for an ex-patriate to think of returning after being cut off for a number of years. One imagines assassins at every street corner to start with, and then what about the children's education? Rajani returned from Britain on the 3rd of September, barely 3 weeks ago, after a 3 month spell of research. Even at this time Rajani could have chosen to remain in Britain, a five star refugee and a full time scholar. She had all the connections ranging from the Amnesty International to the British Refugee Council. But she had a strong sense of justice. She knew that many under dire threat and less fortunate in terms of educational attainment will not be given refugee status by western governments. She more than many others felt this strongly because she befriended many, young and old, from the depressed sections of this society, who themselves and their close relatives, were subject to arbitrary violence without reprieve. No one cared for them. The legal obligation to protect them was only verbally acknowledged in Delhi and in Colombo. Beside her own students, many such people looked up to her.

She was many things to many people. Many students and employees who found her sympathy and understanding of of an unusual order, regarded her a stern but loving mother. To me apart from being a friend, she was sometimes a wondering and uncertain child. She vacillated between the certainties of religious belief and a feeling that the world was a mystery in which like evolution as it is conceived, human effort could make few changes in a sea of randomness. In recent months, she had quite often spoken despairingly of the situation in our country. She wondered if human effort would be of any avail against the colossal evil that stalked the land.

Let us take something that Rajani felt about deeply during these past few weeks. This concerned the militarisation of our children. One side was putting them under arms by unlawful conscription and the other by using questionable forms of inducement. To what purpose? To kill each other. The powers in Delhi and Colombo, their legal protectors, were shamelessly running with the hare and hunting with the hounds. These young persons from the deprived sections of our society were a sizeable part of our future generation.

Who killed Rajani is at present not important for us. We do not know whether it was an accident, deliberate, a mistake or a slip up. Let us merely recognise that there is a good deal of evil around that must be fought by God's grace. We must not give ourselves to hatred, anger or despair. Let us leave to God what is His. He has said, "Vengeance is mine, I will repay". We are told: If thine enemy hunger, feed him : if he thirst, give him drink : for in so doing thou shalt heap coals of fire on his head.

*"Be not overcome of evil, but overcome evil with good"*

### 2. Mr. A. Kadirgamar

(Principal emeritus, Jaffna College)

Words of appreciation and words of consolation are most inadequate at this time to fill the void - the deep and gashing void - that has been created in your lives by the sudden, unexpected and cruel death of our beloved Rajani. We can only pray that God grants us the consolation which only He with His infinite mercy and grace can grant. In the meantime we shall uphold the family in our public and personal prayers.

Hers was certainly a very successful, accomplished and purposeful life. From kindergarten to Ph. D. - if one word could portray her life and work - it is Distinction. Academic distinction and excellence of the highest order all the way. As a toddler, kindergarten child, school girl at Jaffna College with brief bouts at Chundikuli Girls' College, University and Post-Graduate career, practising doctor, researcher, teacher and university don, she never stumbled once and took all her courses and examinations here and abroad in her stride in minimum time with ease and characteristic poise. Her life was one deep, long, unabated breath of thirty-five years in the academic, religious and social concerns which could only be hushed by a cold, calculated bullet which was her mysterious tryst with destiny

The zest for life was so very evident in Rajani's entire life. It will surprise the present generation who only are concerned with tutories, notes and examinations to know that Rajani in her school and university life besides a very successful career in the academic with books, notes and examinations participated actively in all the sports, dramatics, music, literary, oratorical, religious, cultrual and social activities that were available to her in school, University, Church and community and won most of the prizes that were available to her in such activities in school. She was a brilliant after dinner speaker. She was the Sri Lankan University representative at the Worlds Student Christian Federation Conference that took place at the BMICH some years ago when she was at the university. There were more than sixty countries represented in that conference and I was witness to the forceful contribution that Rajani made at the conference and we were all very proud of her. Her interests were truly versatile.

She was loyal to her church always. Even though of a mixed marriage she had the committment to have her daughter baptised in the Cathedral Church Vaddukoddai. She was a founder member of the St. Thomas, Church of the Jaffna University Chaplaincy and last Sunday she worshipped there with my mother and sister. She took time for worship inspite of her very heavy schedule of work at home and university and walked humbly with her God.

Rajani had two very pleasant colleagues in the medical career from the same class at Jaffna College, one now a successful practitioner in London and the other in USA. They were an excellent trio. However, Rajani who could have been as safe and comfortable abroad just for the asking, chose the hard and bitter road of being with her very own here - her family, her Church, her students, her Jaffna, with all its tragedies, blood, sweat and tears! while being here she kept in touch with the best in her field of research and teaching in the West and always returned to Jaffna to share her expertise with her own academic community of staff and students Her students will always be deeply grateful to her and will certainly feel the great loss in an already very disturbing situation with the acute dearth of academic personnel in the Faculty of Medicine in the Jaffna University.

In the very prime of life, in the midst of feverish social concerns and care, at the height of her intellectual powers and deep sensitivity of head and heart, Rajani leaves us with no warning whatsoever, bereft and forlorn. She now joins that mighty throng of the hundreds, nay thousands in our land who have been killed young - in their teens, twenties and thirties for various reasons! We continue to cry and our throats have gone hoarse, "Why? O Lord why? and "How long O Lord, how long?"

Two thousand years ago a young man of 33 with his ministry hardly begun died a horrible and violent death on the cross at the hands of his very own whom he came to serve and we have under similar situations facing unexpected, sudden and violent death of the young, prayed over and over again the prayer: "By thine agony and bloody sweat, Good Lord, deliver us !" and have in the same breath echoed the well known victorious stanzas of faith: "Thine be the glory, risen conquering Son, endless is the victory Thou o'er death hast won ! "

May God in His mercy accept the life and work of Rajani and we commit her life as an offering to God. May the good Lord enfold her soul into His eternal loving care and protection.

May God console all those who will miss her physical presence here.

---

## The Laws of Life.

The world operates on spiritual principles just as it does on physical laws. These laws are important for our welfare. We are all God's creatures; we are falliable, we make mistakes. To grow within ourselves, to reach our full potential as human beings, we need help. The laws of life will help us to achieve more happiness, usefulness and success.

1. Truthfulness:- People of character never promise something and then go back on their word.
2. Reliability:- People who are dependable.
3. Faithfulness:- People who do not cheat or put themselves ahead of you.
4. Perseverence:- You will always give your trust to some one who will see a project through even if difficulties arise and they usually do.
5. Enthusiasm:- To be a success you must work at a task with your whole heart.

( Continued on Page 7 )

## வீரமாமுனிவர் தந்த கிறிஸ்தவ இலக்கியம்

### — தேம்பாவணி :-

V. குணரத்தினம்.

கிறிஸ்தவ இலக்கியங்களுள் தலை சிறந்து விளங்குவன தேம்பாவணியும் இரட்சணிய யாத்திரிகமுமாகும். இரட்சணிய யாத்திரிகம் பாவி ஒருவனின் வாழ்விலே ஏற்படும் மனமாற்றத்தைக் குறிக்கின்றது. நாச நாட்டினின்று பேரின்ப நாட்டிற்குத் தப்பிச் செல்ல விழைகிறான். அவன் மனம் நங்கூரமில்லா மரக்கலம் போல அலைக்கழிக்கப்படுகின்றது. நற்செய்தியாளன் அவனைச் சந்தித்து மோட்சத்தை அடைவதற்குரிய நேரான பாதையைக் காட்டுகிறான். பல தடங்கல்கள் மத்தியிலும் யாத்திரிகன் பின் வாங்காமல் முன்னேறுகின்றான். இறுதியில் மரணவாறைக் கடந்து, வீட்டுப்பேறு அடைகிறான்.

தேம்பாவணி என்பதைப் பிரித்துக் கூறும்போது, இருவேறு கருத்துக்களைப் பெறலாம். எனினும் மையக் கருத்து ஒன்றே. தேன் சகபா சக அணி சமன் தேன் போன்ற பாடல்களால் அமைந்தமாலை. தேம்பாத சக அணி சமன் வாடாதமாலை.

கால்களிலே சிலப்பதிகாரம் எனும் சிலம்பினையும் இடையிலே மணிமேகலை என்னும் மேகலாபரணத்தையும், மார்பினிலே சீவக சிந்தாமணி என்னும் மணிமாலையையும், காதுகளிலே குண்டலகேசி என்னும் குண்டலத்தையும் கைகளிலே வளையாபதி என்றழைக்கப்படும் வளையலையும் (ஐம்பெருங் காப்பியங்கள்) அணிகளாகக் கொண்டிருந்த தமிழ் அன்னைக்குத் தேம்பாவணி ஆசிரியர் வீரமாமுனிவர் வாடாத தேன்மலர் மாலையைச் சூட்டி அழகு செய்தமை பாராட்டுதற்குரியது.

தேம்பாவணியின் கதாநாயகன் 'வளன்' யோசேப்பு. கதாநாயகி மரியாள் (இயேசுவின் தாய்தந்தையர்). இருவரும் சிற்றின்ப நாட்டம் அற்றவர்கள். இறையருளால் வலிந்து இணைக்கப்பட்டோர். இல்லறத்தில் துறவுநிலை மேற்கொண்ட தூயவர்கள். பரிசுத்தாவியினாலே கன்னி மரியாள் கருத் தரித்த போது, யோசெப், மரியாள் மீது சந்தேகங் கொண்டு இரகசியமாக அவளை விவாகரத்துச் செய்யச் சித்தங் கொண்டான். தேவதூதன் வெளிப்பட்டுக் காரண காரிய நிலையை உணர்த்திய போதுதான் ஐயம் தீர்த்துக் கொள்கின்றார். மனந்தேறி மகிழ்வடைந்து மனையையும் தெய்வக் குழந்தையையும் பேணி, தெய்வ நம்பிக்கையுடன் நன்னெறியில் வாழ்கின்றார். ஈற்றில் விண்ணிலும் மண்ணிலும் திருமுடி சூட்டப்படும் பெருமை எய்துகிறார்.

பத்து இயல்களையும் முப்பத்தாறு படலங்களையும் மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து (3615) பாடல்களையும் கொண்டுள்ளது தேம்பாவணி. 1655 – 1665ம் ஆண்டுகளில் ஸ்பானியா நாட்டில் ஆகிர்த மரியாள் எனப்படும் பெண்ணுக்கு கன்னி மரியாள் காட்சி கொடுத்து, இயேசுவின் தந்தை யோசெப்பின் கதையைக் கூற, அப்பெண்மணி எழுதியது "கடவுளின் நகரம்" என்ற கதை. அந்த நூற்கதையைத் தழுவியே வீரமாமுனிவர், தேம்பாவணியை எழுதினார்.

வளன் (யோசெப்) ஜனித்த படலத்தில் அவர் தாயாகிய நீப்பி என்பவள் வளனை இறைவனுக்குக்காணிக்கையாகக் கொடுத்த வேளையில்

"ஆடா நிலையறத்து என் மார்பின் தேம்பாவணியின்
வாடா அருள் மகன்" என்று இறைவனது குரல் அசரீரியாக ஒலித்ததாகவும் அதுகேட்டு அங்கு நின்றவர்கள் எல்லோரும் 'தேம்பாவணியே' என்று குழந்தையைப் பார்த்துப் புகழ் பாடினார்கள் என்றும் வீரமாமுனிவர் கூறுகின்றார்.

'சோலைவாய் இறால் துளித்த தேறலும்
மாலைவாய் மலர் வழித்த தேறலும்
ஆலைவாய் கழை அழித்த தேறலும்
நூலை ஆய்ந்தென நுதலி மூழ்குவான்''

சோலையிலுள்ள தேன் கூடுகளிலிருந்து சொட்டுந்தேன், ஆலையில் பிழியப்படும் கருப்பஞ் சாற்றில் சேகரிக்கப்படும் தேன் அனைத்தையும் புத்தக ஆய்வு செய்யும் ஒருவனைப் போல ஆராய்ச்சி செய்து அந்தத்தேன் வெள்ளத்திலே மூழ்கி விடுபவன் வளன். அத்தகையவன் தேம்பாவணியாகவே இருப்பான் என்பதில் ஐயமேது?

தேம்பாவணியின் கதையானது முழுவதும் யூதேயாவைக் களமாகக் கொண்டதாக விருப்பினும், வீரமாமுனிவர், கதையையும் நாட்டையும் அதில் நடமாடும் பாத்திரங்களையும், தமிழ் நாட்டின் மண்ணுக்குரியனவாகப் படைத்திருப்பது நாம் எண்ணிப் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

---


## தென் இந்தியத் திருச்சபை, யாழ். அத்தியட்சாதீனம்.

## கிறிஸ்தவ குடும்ப விழா.

**இடம்:** மானிப்பாய் தென் இந்தியத் திருச்சபை.

**காலம்:** 28 - 10 - 89 சனிக்கிழமை.

**நேரம்:** காலை 8.30 தொடக்கம் மாலைவரை

விசேட ஆராதனையைத் தொடர்ந்து
கருத்தரங்கு
வேத அறிவுப் போட்டிகள்,
கலை நிகழ்ச்சிகள். இடம் பெறும்.
மதிய போசனம் வழங்கப்படும்.

மாலை நிகழ்ச்சியாக சிறுகைத்தொழில் பயிற்சி நிலைய மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவமும், கண்காட்சி, விற்பனவு விழா திறந்து வைத்தலும் யாழ் ஆதீனத்தின் பேராயர் அருள்மிகு டி.ஜே. அம்பலவாணர் அவர்களால் நடத்தப்படும். மாலை, தேநீர் உபசரணையுடன் விழா முடிவடையும்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

நல்வருகை தருக:

ஏ.ஆர். தம்பியப்பா
பெண்கள் ஐக்கியம்.


---

சாதுவுடன்... தொடர்ச்சி

ஆயத்தஞ் செய்து கொள்ளவேண்டுமென்பதே அவரது விருப்பம்.

தத்துவ ஞானி: நீர் உம்மை, மற்றவர்களைப் போல் பாவியென்றும் பலவீன முடையவரென்றும் கருதுவதாகக் காண்கிறேன். அப்படியானால், உமக்கும் உலக மக்களுக்குமிடையில் எவ்வித வேறுபாடு உள்ளது? உம்மை ஒரு பரிசுத்தர் எனப் பிறர் கூறுவது ஏன்?

சாது: புகழ் பெற்ற கிரேக்க தத்துவ ஞானியாகிய சாக்ரடீஸ், தம் வாழ் நாள் முழுவதிலும் ஒரே ஒரு பாடம் கற்றதாகக் கூறுவார். அப்பாடம் யாதெனில்-தான் அறிவற்றவன் என்பதுதான். சாக்ரடீஸே தன்னை அறிவற்றவன் எனக் கருதினால், அவருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு யாதென அவரிடம் மக்கள் கேட்டபோது, அவர் கொடுத்த விடை: 'நான் அறிவற்றவன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஏனையோருக்குத் தாங்கள் அறிவற்றவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது' என்றார்.

எனது அனுபவம், சாக்ரடீஸ் அனுபவத்தை ஒத்தது. நான் பலவீனமானவன், பாவி என்பது எனக்குத் தெரியும்; ஆனால் ஏனைய மக்கள் தாங்கள் பாவிகள் என்பதை அறியாது வாழ்கிறார்கள். அதனால் தங்கள் பாவங்களுக்குரிய மன்னிப்பை (மீட்பை) அவர்கள் தேடாது, தங்கள் பாவநிலையிலேயே மடிந்து போகிறார்கள்.

மற்றவர்கள் என்னைப் பரிசுத்தவான் எனக் கருதினால், அது அவர்களுடைய தவறு. தூய கடவுளுடன் நெருங்கி வாழ்ந்து, நான் தூய்மை பெற முயலுகிறேன். ஆனால், நான் தூயவனாக ஆகிவிட்டதாக ஒருபோதும் சொல்லமாட்டேன். என் மீட்பரோடு நான் நெருங்கி வாழ்வதால், புத்திக்கு எட்டாத கடவுளின் சமாதானம் என் உள்ளத்தை நிரப்புகிறது. அதனால் வரும் இன்பதை, எந்த மொழியிலும் நான் வருணிக்க முடியாது. உலக மக்கள் இந்த இன்பத்தை அறியாது வாழ்கிறார்கள்.

– இவ்வுரையாடலுக்குப் பின் தத்துவ ஞானியும் சாதுவும் பரிவோடு ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். பின்னர், தத்துவ ஞானி விடை பெற்றுச் சென்றார். சாது தன் அன்றாட வேலைகளைத் தொடர்ந்து செய்ய, செபித்த பின் அக் குகையை விட்டு வெளியே சென்றார்.

---

## திருமதி ரஜனி திரணகம.

மருத்துவ ராணி யென்றும்;
மாணவர்க் கேணி யென்றும்;
கருத்துடன் சேவை யாற்றும்,
கலைமகள் மாண்டு விட்டாள்!
பொருத்தமாய்ப் பதவி யேற்றுப்
பொலிவுறச் செய்த மாதை;
வருத்தியே சாக டித்தார்!
வாழ்வினைப் பாழ டித்தார்!

மாணவர் நெஞ்சிலென்றும்
மதிப்புடன் வீற்றி ருக்கும்;
தேனவள் ஈழ நாட்டின்,
தேவதை போல நின்றும்;
ஏனவள் மாண்டு விட்டாள்?
எங்களை ஏங்க விட்டாள்?
காணவள் பெருமை யென்றே,
கவிதைகள் பாட வந்தேன்!

கற்றதோர் கல்வி யென்ன?
கடமையின் ஏற்ற மென்ன?
உற்றதோர் ஆற்ற லென்ன?
உன்னதப் பணிக ளென்ன?
பெற்றதோர் பெருமை யென்ன?
பெண்மையின் எழுச்சி யென்ன?
அற்றதோ யாவு மிங்கு?
அவளையா மிழந்த பின்பு!

கொஞ்சமோ துயர மிங்கு?
குறையுமோ நம்மை விட்டு?
நெஞ்சமோ தீயி லென்று;
நிற்கிறோம் நீதி கெட்டு!
வஞ்சமோ வாழ்வி லென்று;
வாடினோம் உயிரை விட்டு!
பஞ்சமோ இன்ப மிங்கு?
பதறுமோ உள்ள மின்று?
நல்லதோர் வீணை தன்னை,
நலங்கெடப் புழுதி தன்னிற்,
புல்லரோ எறிந்து விட்டார்!
புலமையைத் தின்று விட்டார்!
வல்லதோர் மருத்து வத்தில்,
வல்லவி என்று உன்னை -
அல்லவோ பார்த்தி ருந்தோம்!
அள்ளியேன் சென்று விட்டார்?

மண்ணிலே பிறந்து நின்றும்;
மருத்துவம் பார்த்து வென்றும்;
விண்ணிலே புகழை நட்டும்;
விழிகளிற் கருணை சொட்டும்;
கண்ணியம் மிக்க தாய்மை;
கனவிலும் கல்வி; உண்மை!
பெண்ணினம் வியக்க வுன்னைப்,
பெற்றவள் வீர அன்னை!

இல்லறத் தலைவி யென்றும்;
ஈடில்லாப் பெண்மை யென்றும்;
நல்லறக் கல்வி யென்றும்;
நம்மவர் செல்வ மென்றும்;
சொல்லறம் உண்மை யென்றும்;
சோர்விலாச் சிந்தை யென்றும்;
பல்லறம் நாட்டி வென்ற,
பாவையர் திலக மெங்கே?

பொன்னகை அணிவ தில்லை;
பூக்களுந் தரிப்ப தில்லை;
மின்னலை ஒத்த பேச்சு;
மிகைபடா ஆழ வீச்சு;
புன்னகை சிந்தும் உள்ளம்;
புல்லரை அழித்த வெள்ளம்;
இன்னமு தான எண்ணம்;
''இராஜனி'' இந்த வண்ணம்!
ஊரிலே சொல்வ துண்டு;
உயர்ந்ததோர்பெண்மையென்று!
நேரிலே பார்த்த தில்லை;
நெருங்கியும் பழக வில்லை;
பாரிலே பூத்த முல்லை;
பாவைநீ பண்பி னெல்லை!
வேரிலே விழுந்து வீட்ட,
வீரியம் மறைவ தில்லை!

ஜெயசீலன்.

---

## சமயம்.

மக்கள் சமுதாய வளர்ச்சியில் சமயம் என்பது மிகப் பழங்காலத்திலிருந்து மெல்லமெல்லத் தோன்றியஓர் அமைப்பாகக் கருத முடிகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் ஒன்றும் ஒன்றிற்கும் மேற்பட்டனவுமாகப் பல சமயங்கள் உள்ளன. ஒரு சமயத்திலும் கூடப் பற்பல கிளைச் சமயங்கள் நிலவுவதையும் பார்த்து வருகின்றோம்.

மனிதனுடைய உள்மனம் சார்ந்த உணர்ச்சிகளைத் தொடுவனவாகவே ஒவ்வொரு சமயமும் வலியுறுத்தும் சிந்தனைகள் உள்ளன. இச்சிறு கட்டுரைத்துணர் 'சமயம்' என்ற சொல் எப்பொருளில் சான்றோரால் படைக்கப் பெற்றது என்பது பற்றிய வேர்ச்சொல் ஆய்வு சார்ந்ததாகும்.

வேர்ச்சொல் பற்றிய ஆய்வில் நாம் உலகியலில் ஒரு தலைப்பைப் பற்றிப் பருப்பொருள் நிலையில் அறிந்து கொள்ளும் விரிவிளக்கக் கருத்துக்களை அத்தலைப்பினைச் சார்ந்த ஒரு சொல்லின் மூலப் பொருளை மட்டும் அறியும் போதே நம்மால் சுருக்கமாக அறிந்து கொள்ள முடியும். பேராலமரத்தின் தன்மை நுண்ணிய அதன் வித்தில் பொதிந்திருப்பதைப்போல் ஒரு தலைப்பின் பொருளை அத்தலைப்புச் சுட்டும் சொல்லொன்றில் அறியலாம் என்று சுருங்கச் சுட்டலாம். அதிலும்,தமிழ் மொழி,தானே தனித்துத் தோன்றி வளர்ந்தஓர் இயற்கை மொழி. ஆதலால் அதன் சொற்கள் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற பெருமை மிகு வரலாற்றிற்குச் சான்று பகர்கின்றனவாகவே இலங்குகின்றன.

# உதய தாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். நீதி ஜனத்தை உயர்த்தும் : வெள்ளிதோறும் வெளிவருவது பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 | 6,13 - 10 - 1989 | [இதழ் 40,41


## சிந்தனை 33.

ஆமோஸ் 9 :

### செய்ய வேண்டியது என்ன.

துன்பத்திற்குக் காரணம் ஆசை என்பது புத்ததர்மம் கூறும் உண்மை. இவ்வுண்மையைப் பல நூற்றுண்டுகளுக்கு முன், விவிலியம் கூறிவைத்துள்ளது. ஆதியா. 3:1–7. ஆசையிலிருந்து மீட்பு அடையவும், ஆசையினுல் உண்டாகும் துன்பச் சுமையிலிருந்து விடுபடவும் பரிநிர்வாணமே வழி என்று கூறுவது புத்ததர்மம். இதற்கு வழி வகுத்துத் தருகிறது நீதிமொழி 28:13. ஆசையினுல் வருவது மீறுதல். மீறுதலால் உருவாகுவது தவறுகள். தவறுகளிலிருந்து மீட்பு உருவாக வேண்டுமானுல், தவறுகளை மறைக்காது அறிக்கை செய்து விட்டுவிடுவதே, மீட்பின் வழி என்பது விவிலியம் தரும் உண்மை.

அன்புக்குப் பயப்பட வேண்டும். அன்புக்கு ஒன்றையும் மறைக்கக் கூடாது. அன்பு கூறும் மன்னிப்பை அசட்டை செய்யவும் கூடாது. இவ்வுண்மையை மனித இனம் கற்றுக் கொண்டால், இவ்வுலகம் நல்ல உலகமாக மாறிவிடும்.

இவ்வுண்மை ஆமோசுடைய நூலில் இழையோடி நிற்கிறது. கட்டுப்பாடு இல்லாத வாகன ஓட்டிகளும், சமிக்கை விளக்குகளுக்குப் பணிந்து அடங்காதவர்களும் அனுபவிப்பது துன்பமே. அதுமட்டுமல்ல, அவர்களால் நடைபாதைப் பயணிகளும் துன்பம் அனுபவிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

கட்டுப்பாடு இல்லாத வாகன ஓட்டிகள்போல் வாழ்ந்த இஸ்ரவேலரை, ஆமோசு எச்சரித்தார். "கெடு குடி சொற் கேளாது" என்பதற்கிணங்க, இவர்கள் அன்புக்கு அடங்கி வாழாது அணை இல்லாத வெள்ளம் போல் வாழ்ந்தார்கள். அன்று, யோர்தான் நதிக்கரைக்கு, தன்னிடம் வந்த மக்களைப் பார்த்துத் திருமுழுக்குவன் யோவான் கூறியது லூக்கா 3:8 இல் தரப்படுகின்றது. இதே போன்று, 9:7 இல் வீண் பெருமை வேண்டாமென்று இஸ்ரவேலரை எச்சரித்தார்.

இறுதியாக இறைவாக்கினன் ஏசாயா, 11:1 வசனத்தால் புதிய நம்பிக்கையின் சுடரை எரிய விடுவது போல, 9:12 ஆம் வசனத்திலிருந்து முடிவுவரை புதிய நம்பிக்கையின் சுடரை எரியும்படி செய்து "நம்பிக்கையில் நான் வளர வேண்டுமையா, அவநம்பிக்கையை நீக்கி அருள் செய்யுமையா" என்று கூறுகின்றுர்,

நம்பிக்கை கெட்டு மக்கள் மனம் வெதும்பி வேதனைப்படும் போது, மேலும் மக்களை வேதனைப்படுத்துவது இறைவாக்கினரின் பணி அல்ல.

இன்று நாமும், நம்பிரதேசமும் நம்பிக்கையை இழந்து இருக்கும் இன்றைய காலகட்டத்தில், நம்மையெல்லாம் பயப்படுத்தி நெஞ்சு நடுங்கும்படி செய்வது நியாயமானது அல்ல. நமக்கும் நம் எதிர்கால இளைஞருக்கும் வேண்டியது நம்பிக்கை தரக் கூடிய செய்தி தான். இதற்கு, முதலாவது வேண்டுவது அன்புள்ள இறைவனுக்குப் பயப்படும் பயம். இரண்டாவது வேண்டப்படுவது, உண்மையை மறைக்காத தூய உள்ளம் என்று அறிந்து, நம்மையெல்லாம் முன்னேக்கித் தள்ளும் இறைவன் பரிசுத்தர் என்று அறிந்து, நம்பிக்கையின் செய்தியை அறிவிப்பதே ஏற்புடையது.

தூய உள்ளங்கள் மனித நேயத்தை
விரும்பும்;
மனித நேயமில்லாதோர் தூய
உள்ளம் இல்லாதோரே.

துறையூரான்.
வண. ஆ. வே. யேசுதாசன்,
காரைநகர்.

❁ ❁ ❁ ❁ ❁

## செய்திச் சரங்கள்:

### ★ இலங்கை மெதடிஸ்த திருச்சபை-புதிய தலைவர்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புதிய தலைவராக, அருள் திரு. டாக்டர் கிங்ஸ்லி முத்தையா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவர், காலஞ்சென்ற அருள் திரு. டி. எ. முத்தையா அவர்களின் மகனுவார். வண. முத்தையா அவர்களும் மெதடிஸ்த திருச்சபையில், போதகராகக்கடமையாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. டாக்டர் கிங்ஸ்லி முத்தையா 1990 ஆம் ஆண்டில், தமது தலைமைப் பதவியை ஏற்பாரென அறிகிறேம்.

### யாழ். சென்ற் பீட்டர்ஸ் சபையில்...

மெதடிஸ்த மிஷனின் 175 ஆம் ஆண்டு நிறைவு விழாக் கூட்டங்கள்.

இம்மாதம் 8 ஆம் திகதி தொடங்கி 10 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் நற்செய்திக் கூட்டங்கள் புனித பேதுரு மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெற்றன. இக் கூட்டங்களில், அருள் திரு. ஜோர்ஜ் E. குட் அவர்கள் அருளுரைகள் வழங்கினர். இக் கூட்டங்கள், மேற்படி சபையின் குருவானவர் அருள் திரு. K. P. கோவிந்தராஜ், வண. செபநேசன், வண. சந்தியன் கதிர்காமர் ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்டன. வண. ஜோர்ஜ் குட் அவர்கள், பல ஆண்டுகள் இலங்கை மெதடிஸ்த சபையில் கடமையாற்றியவர். இப்போ, தனது பிறப்பிடமாகிய அயர்லாந்து நாட்டில் குருப்பணி செய்து வருகிறார். 175 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தார்.

### நன்றி செலுத்தும் ஆராதனை.

உடுவிலில் வசித்தவரும், உடுவில் தென்னிந்திய திருச்சபையின் உயிர்ப்புள்ள உறுப்பினருள் ஒருவராகத் திகழ்ந்தவரான காலஞ்சென்ற திரு. W. T. H. சுகிர்தரத்னம் அவர்களின் வாழ்க்கைக்காகவும், நற்பணிகளுக்காகவும் நன்றி செலுத்தும் ஆராதனை, உடுவில் சி. எஸ். ஐ. தேவாலயத்தில், சபைப் போதகர் வண. டி. சி. இரத்னசிங்கம் அவர்கள் தலைமையில், செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி பி. ப. 3.00 மணியளவில் நடத்தப்பட்டது.

இவ்வாராதனைக் குரிய திருமறைப் பாடங்கள், செல்வன் D. ஸ்பென்சர், திரு. M. N. சுகிர்தரத்னம் ஆகியோரால் வாசிக்கப்பட்டன. திரு. K. பவசிங்கம் தேவாரம் பாடினுர். அன்னுரின் குடும்பத்தினரும், சபைப் பாடகர் குழுவும் சிறப்புப் பாடல்களைப் பாடினர். திரு. சுகிர்தரத்னத்தின் உடன் மாணவனுயும் நண்பனுயுமிருந்த திரு. C. E. இரத்னசிங்கம் புகழுரை வழங்கினுர். வண. டி. ஆர். அம்பலவாணர் அவர்கள், அருளுரை ஆற்றினுர். போதகர் அவர்கள் – "உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" (யாத் 20:12) என்ற வசனத்தில் பிரசங்கம் செய்தார். அவர் தம் அருளுரையில், பிள்ளைகள் தமது பெற்றேருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை, ஏற்ற உதாரணங்களுடன் விளக்கி, குறிப்பாகத் தாய் தகப்பன் முதிர்வயதடைந்திருக்கும் போது, அவர்களுக்குப் பிள்ளைகள் செலுத்தவேண்டிய அன்புக் கடனையும் வலியுறுத்தினுர்.

இதன்பின் பேராயர் அருள் மிகு டி. ஜே. அம்பலவாணர், திரு. சுகிர்தரத்னம் அவர்களின் நினைவாக, தேவாலயச் சுவரில் பதிக்கப்பட்ட நினைவுக்கல்லைத் திரை நீக்கஞ் செய்து, செபித்து, ஆசீர்வாதம் வழங்கினுர். ஆராதனையின் பின் அனைவருக்கும் தேநீர் விருந்துபசரணை நடைபெற்றது.

### கிறிஸ்தவ இறையியல்க் கல்லூரியின் முத்தமிழ் மன்றம்.

— பாரதியார் விழா —

சுண்ணுகத்திலுள்ள கிறிஸ்தவ இறையியல்க் கல்லூரியின் முத்தமிழ் மன்றம், செப்டெம்பர் 20 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில், பாரதியார் விழாவைக் கொண்டாடிற்று. சிறப்பு விருந்தினராக, கல்லூரிப் பதிவாளர் திரு. A. கதிர்காமர் அழைக்கப்பட்டார்.

இவ் விழா, ஆச்சிரமத்திலுள்ள பெரியண்ணன் மண்டபத்தில், மன்றத் தலைவர் செல்வன் P. லோகநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அன்று நடைபெற்ற கவியரங்கத்தில், செல்வி ப. குணவதனி, செல்வி பி. கனகரத்னம், செல்வன் K. நடராசா, செல்வன் V. லோகநாதன் ஆகியோர் பங்கெடுத்தனர். மன்றத் தலைவர், பாரதியாரின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினுர். செல்வன் T. அசோக்குமார், சிறப்புப் பாடல் பாடினுர். மன்றத்தின் போஷகர் அருள் திரு. டி. ஆர் அம்பலவாணர், 'பாரதியாரின் உள்ளம்" — என்ற பொருளில் சொற்பொழிவாற்றினுர். இறை ஆசியுடன் விழா இனிது முடிவுற்றது கூட்டத்தின் முடிவில் அனைவர்க்கும் தேநீர் உபசரணை நடத்தப்பட்டது.

இம் மன்றத்தினரால், "மனந்திரும்பிய மைந்தன்" என்ற தலைப்பில், ஆச்சிரமத்தின் ஆண்டு விழாவிலும், கடந்த மாதம் உடுவில் சத்தியபுரச் சபையின் நன்றி செலுத்து விழாவிலும், அளவெட்டிச் சபையின் ஆண்டு விழாவிலும், நாட்டுக் கூத்தொன்று நடிக்கப்பட்டது. இக் கூத்தின் மூலமும், ஊமம் காட்டிய நிகழ்ச்சி மூலமும், நற்செய்தி வழங்கப்பட்டது இம் மன்றத்தினரால் நடத்தப்பட்ட இந் நிகழ்ச்சிகளை, அனைவரும் பாராட்டி வரவேற்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ★ தென் இந்தியத் திருச்சபை 42 ஆம் ஆண்டு நிறைவு.

தென் இந்தியத் திருச்சபை நிறுவப்பட்டு 42 ஆண்டுகள் நிறைவு பெற்றதை நினைவு கூர்ந்து, யாழ். ஆதீனத்திற்காகவும், இத் திருச் சபையின் மூலம் இறைவன் ஆற்றிவரும் பெரும் பணிகளுக்காகவும் நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு, சுண்ணுகத்திலுள்ள கிறிஸ்தவ இறையியல்க் கல்லூரியினுல் செப்ரெம்பர் 27 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு, ஆச்சிரமத்தின் செபாலயத்தில், அருள் திரு. டி. ஆர் அம்பலவாணர் அவர்களால் நடத்தப்பட்டது. இறையியல் மாணவர் மன்றத்தின் தலைவர் செல்வன் T. அருட்செல்வம், கல்லூரிப் பதிவாளர் திரு. A. கதிர்காமர் ஆகியோரால் முறையே திருபவாக்கியமும், நற்செய்திப் பகுதியும் வாசிக்கப்பட்டன. அருளுரை, வண. டி. ஆர். அம்பலவாணர் அவர்களால் வழங்கப்பட்டது. தென் இந்தியத் திருச்சபைக்காகவும், யாழ். ஆதீனத்திற்காகவும் விசேட செபங்கள் திரு. I. அருள்பாலனுல் ஏறெடுக்கப்பட்டன. போதகரின் ஆசீர்வாதத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

### இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்.

**வயிற்றுக் கடுப்பு-சீத பேதிக்கு.**

மாதுளம் பழத் தோலைக் கருகச் சுட்டு, தூள் செய்து ஒரு தேக் கரண்டி அளவு எடுத்து 4 அவுன்ஸ் மோரில் கலந்து காலையில் மட்டும் சாப்பிட, சீத பேதி குணமாகும்.

**கண்கட்டிக்கு.**

துளசி இலையை எடுத்துக் கசக்கி அதன் சாற்றை எடுத்துக் கண்கட்டியின்மேல் பூசிவர, கட்டி உடைந்து ஆறும்.

**இருதய வியாதிகளுக்கு கஷாயம்.**

செம்பரத்தம்பூ இரண்டு எடுத்து இரண்டு வேளை நீரில் போட்டு, அரைப்பலம் மருதம் பட்டை இடித்துப் போட்டுக் காய்ச்சி, ஒருவேளை கஷாயமாக்கித் தினம் காலையில் சாப்பிட, இருதய சம்பந்தமான நோய்கள் தீரும்.

**ஜீரணமாகும் நேரம.**

பொரித்த உருளைக்கிழங்கு, இரைப்பையில் ஜீரணமாக நான்கு மணி நேரம் செல்கிறது. வேக வைத்த முட்டைக் கோவா ஜீரணமாக, நான்கு மணி நேரமாகிறது. என்றெல்லாம் அமெரிக்க உணவு ஆராய்ச்சியாளர் டாக்டர் வில்லியம் பொமனட் கண்டுபிடித்துள்ளார். இதனுல், இவற்றைச் சாப்பிடுகிறவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவை, நோயாளிகளுக்கு ஏற்ற உணவல்ல.

---

–இன்று–

1) காலையில் வேலைக்குத்துள்ளி எழும்
நாம் — இன்று
வேலை செல்ல மனம் இன்றி இருக்
கிறேம்.
2) மலர்ந்த முகத்துடன் பாடசாலை
சென்ற நாம் - இன்று
மன நிம்மதியின்றி, செய்வது அறி
யாது இருக்கின்றேம.
3) பாடசாலையில் ஊக்கமுடன
பாடம் படித்த நாம் - இன்று
படித்த பாடங்களையே மறந்து
பள்ளி செல்லாது இருக்கிறேம்.
4) படிப்பதனுல் பட்டம் பெறுவோம்
என நினைத்த நாம் - இன்று
பாதியிலே படிப்பை விட்டு வெளி
நாடு ஓடுகிறேம்.
5) சுதந்திரமாய் வீதியில் சென்ற
நாம் - இன்று
சுருண்டு போய் வீட்டு மூலைக்குள்
கிடக்கின்றேம்.
6) ஒன்று கூடி இறைவனைத் தொழு
கின்ற நாம் - இன்று
ஒற்றுமையாகக் கூட்டம் நடத்தத்
தயங்குகிறேம்.

ஜெயசீலன்.

# உலக உணவு தினம், 1989.

இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம்

காலம் : 16. 10. 1989 திங்கட்கிழமை காலை 9.00 மணி

தலைவர் : T. குகதாசன் அதிபர்

பிரதம விருந்தினர் திரு. L. R. முத்தையா அவர்கள்
(தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்ப விவசாய நிறுவன ஆளுநர் சபை)

## சொற்பொழிவு

1. "உணவு உற்பத்தி" திரு. K. குணரத்தினம்
(உதவி விவசாயப் பணிப்பாளர், யாழ். மாவட்டம்)
2. "நன்னீர் மாசாக்கப்படுதலின் உயிரியல் கோட்பாடுகள்"
திருமதி. ந. செல்வராஜா
(தலைவர், விலங்கியல் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
3. "உணவும் சூழலும்" பேராசியர் K. தெய்வேந்திரராசா
(தலைவர், தாவரவியல் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
4. "நீர் வாழ்வனவும் சுற்றுடலும்" திரு. சோ. சாம்பசிவம்
(நீர்வாழ்வியலாளர், கடற்றொழில் அமைச்சு, வடபிராந்தியம்)
5. "உணவு உற்பத்திக்கான எமது சுற்றுடலின் ஆற்றல்"
பேராசிரியர் S. கந்தையா
(தாவரவியல் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
6. நன்றியுரை

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மருதனமடம், அதிபர்
சுன்னாகம். யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

---

சிறுவர் பகுதி:



### அன்புத் தங்கமே.

அன்புத் தங்கமே அறிந்திடுவாய்
பண்புடன் பகிர்வதைக் கேட்டிடுவாய்
கன்னல் மொழியே பேசிடுவாய்
கண்ணிய வாழ்வு வாழ்ந்திடுவாய்
பறக்கும் பட்டம் வாங்காமல்
படித்தே பட்டங்கள் பெற்றிடுவாய்
சிறக்கும் திட்டங்கள் தீட்டிடுவாய்
சீராய்ச் சிறப்பாய் வாழ்ந்திடுவாய்.
நேயர்கள் உன்னை அணைத்திடினும்
அசந்தே நீயும் போகாதே
உயர்வுகள் தன்னைத் தழுவிடவே
உடனே முயற்சி செய்திடுவாய்.
நூல்கள் பலதை நுகர்ந்திடுவாய்
நுண்ணறிவாலே நிறைந்திடுவாய்
நிதமும் நீயே நிலம் போலே
நிகராம் பொறுமை தாங்கிடுவாய்
வேதனை வருவது அற்பமென
வெந்தே மனதுள் துவளாமல்
சிந்தனை விழியைச் சுழலவிட்டு
சாதனை புரிந்திடத்துணிந்திடுவாய்.

### எதிர்பாராதது.

ஏமாந்தவர்களுக்கு, வாழ்க்கை அமைதியற்றவைகளாகவே அமைந்து விடும். ஆனால், எதிர்பாராமல் கிடைக்கும் எந்த மகிழ்ச்சியும் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாகவே நிலைத்து நிற்கும்.

திருமண விழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்ற ஏனைய இல்லிருந்துபசாரங்களில் அழைக்கப்படவர்களிடமிருந்து அழைப்பு விடுத்தோர் எதிர்பார்ப்புக் கேற்ற பரிசுப் பொட்டலங்கள் அல்லது பணப் பரிசில்களோ கிடைக்கலாம். இதில் ஏற்படும் மகிழ்ச்சியைவிட,

- விதியில் விபத்தில் சிக்கிய மனிதனுக்கு கிடைக்கும் உதவி.
- ஏழை விவசாயிக்குக் கிடைக்கும் சமூக சன்மானம்.
- அகதிகளாய் அநாதையாக்கப்பட்டோருக்குக் கிடைக்கும் உணவு.
- முதியோர் இல்லத்தில் தனிமையில் வருந்துவோருக்குக் கிடைக்கும் அன்புப் பரிமாற்றம்.
- நாளந்த தொழிளாளிக்குக்கிடைக்கும் அமெரிக்க விசா போன்ற எதிர்பாரா நிகழ்வுகள் மனதில் தோற்றுவிக்கும் மகிழ்ச்சி அளப்பரியது.

சமூக சம்பிரதாயங்களால் விளையும் மகிழ்வு நிலையற்றது. மாறாக, தியாக உணர்வால் உந்தப்பட்டு வெளிப்படுத்தப்படும் மகிழ்ச்சியே என்றும் நிலைத்து நிற்கும்.

– ஜெயசீலன் –

### சீக்கிய மதக்கோயில் பற்றி அறிஞர் அண்ணு கூறுகிறர்.

அமிர்தசரசிலுள்ள சீக்கியக் கோயிலுக்கு நான், மூன்று, நான்கு தடவைகள் போயிருக்கிறேன். அந்தக் கோயிலுக்குள் சென்று வரக்கூடிய எவரும் சீக்கிய மதத்திடம் மிகுந்த மரியாதையுடனேயே திரும்புவர்' அத்தனை நேர்த்தியாகவும், சுத்தமாகவும் அக்கோயில் வைக்கப்பட்டுள்ளது

அக்கோயிலுக்குச் சென்றிருந்த போது. அங்கே ஒரு காட்சியைக் கண்டேன். நனருக உடுத்திருந்த ஒருவர், அக்கட்டடத்தின் தாழ்வாரங்களை எல்லாம் சுத்தம் செய்ததோடு, அங்கிருந்த காலணிகளை எல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டுமிருந்தார்.

நாம் ஆராதனை நடத்தும் நமது கோயில்கள் பற்றி இப்படிச் சொல்வாரா?

---

### மார்ட்டின் லூதர் கிங்கின் சிந்தனைத் துளிகள்!

❀ அநீதி.

அநீதியான சட்டங்களைத் தகர்க்க, ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு. அதுமட்டும் அல்ல— அது அவன் கடமையுங் கூட.

❀ கல்வி.

இன்றைய உலகில் பரவி வரும் கருத்துக்கள் பல. இவற்றில், எந்த ஒன்றுக்கும் ஒருவர் அடிமையாகாது, தானகச் சிந்திக்கவும், முடிவுகளை அடையவும் உதவுவதே உண்மைக் கல்வி.

❀ அகிம்சை.

அகிம்சா முறைகள் ஒருவரின் பெலவீனத்தையும் கோழைத்தனத்தையும் காட்டுவதல்ல. இயேசு கிறிஸ்து நிரூபித்தது போல, சாத்வீக முறைகளைப் பயன் படுத்திப் போராடும் போது, பலவீனம் பலமாக மாறும். நெஞ்சம் அஞ்சும் சூழலில், தனிச் சக்தியை ஊறச் செய்யும்.

❀ குழு முயற்சிகள்.

தனி ஆட்களைவிட, அதிக கேடுகளைச் செய்யக் கூடியவர் குழுவினரே.

❀ எதிர்காலத்தைப் பற்றிய கனவு.

எங்கும் உள்ள மக்கள் யாவருக்கும், குறைவில்லாமல் மூன்றுவேளைச் சாப்பாடும், பணமும் - படிப்பும் பெற வாய்ப்பும், அவர்களின் ஆன்மாவுக்குச் சுதந்திரமும், சமத்துவமும், கண்ணியமும் கிட்டுமென நம்புகிறேன். சுயநோக்குடன் வாழ்ந்தவர் இடித்துப் போட்டவற்றை, வெளி நோக்குடைய பெரியவர்கள் கட்டி முடிப்பார்கள். ஒரு நாள் மனுக்குலம் கடவுளின் ஆசனம் முன் அடிபணிய, அவர் போர்களையும் உயிர்ச்சேதங்களையும் ஓயப்பண்ணுவார்.

❀ நீக்குரோக்களின் போராட்டம்.

இரத்தம் வெள்ளமாகப் புரண்டோடும். அதன் பின்னரே நாம் வெள்ளையருடன் ஒத்துரிமை கொண்டு வாழும் காலம் வரும். இதற்காக, நீக்குரோக்கள் தம் இரத்தத்தைச் சிந்த முன்வர வேண்டுமேயன்றி, வெள்ளையரின் உடலுக்கோ, உயிருக்கோ சேதம் விளைவிக்கக் கூடாது.

### இந்து சமுத்திரத் தீவுகளில் சர்வதேசத் தமிழ் மாநாடுகள்.

உலகத் தமிழர் வாழ்வில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் இரு சர்வதேச மாநாடுகள் இவ்வருட இறுதியில் இரு இந்து சமுத்திரத் தீவுகளில் நடைபெறவுள்ளன.

மொறிஷியஸ் தீவில், டிசம்பர்த் திங்களில் நடைபெறும் ஏழாம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும், நவம்பர்த் திங்களில், றீயூனியன் தீவில் இடம் பெறும் ஐந்தாவது உலகத் தமிழர் பண்பாட்டு மாநாடுமே சம்பந்தப்பட்ட இரு மாநாடுகளாகும்.

மொறிஷியஸ், றீயூனியன் தீவுகளில் வதியும் தமிழ் மக்கள், தமது தாய் மொழியை மறந்தவர்களாக, இன்று பிரெஞ்சு மொழியையே தமது பேச்சு மொழியாகக் கொண்டு வாழ்ந்து வருகிறர்கள்.

ஆகவே, பேற்படி தமிழாராய்ச்சி மாநாடும், தமிழ்ப்பண்பாட்டு மாநாடும் சம்பந்தப்பட்ட மக்களிடத்தில், ய் மொழியையும், தமிழர் வாழ்வு முறையையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தை ஏற்படுத்துவதில் ஓர் மைல் கல்லாக அமையும் என்று கூறலாம்.

அந்த வகையில், முதல் அடி எடுத்து வைக்கப்பட்டது பிரான்சு நாட்டின் தலைநகரான பாரீஸ் நகரிலாகும். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொடரில், முதல் மாநாடு மலேசியத் தலைநகர் கோலாலம் பூரிலும், இரண்டாம் மாநாடு சென்னையிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து மூன்றும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பாரீஸ் நகரிலேயே நடைபெற்றது.

அனைத்துலக அடிப்படையில் கூட்டப்படும் மாநாடாதலால், கடந்த தமிழாராய்ச்சி மாநாடுகளில் ஆங்கிலத்தில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டது போன்றே சர்வதேச மொழிகளுள் ஒன்றுன பிரெஞ்சு மொழியிலும் கட்டுரை படிக்கும் வாய்ப்பு ஆராய்ச்சியாளர்களுக்கு இம்முறை உண்டு. பிரென்சு மொழியில், தமிழாராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்கும் வாய்ப்பு, பாரிஸ் மாநாட்டின் பின் (மொறிஷியஸ் தீவு பிரெஞ்சு மொழி பேசப்படும் ஒரு நாடாக இருப்பதால்) போட் லூயி நகரில் நடைபெறும் தமிழாராச்சி மாநாட்டிலும் நிரம்ப உபயோகிக்கலாம். பிரென்சு மொழியில் படிக்கப்படும். தமிழாராய்ச்சிக் கட்டுரைகளால் தமிழை மறந்து வாழும் தமிழருடைய ஆர்வம், தமிழாராய்ச்சியின் பால் தூண்டப்பட வாய்ப்பு உண்டாகும் - தமிழை அறியும் ஆவலும் தழைக்கும்.

அது போன்றே உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகமும், தனது மூன்றுவது உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டை, மொறிஷியசில் நடாத்தியதால் அங்கு பிரவாகித்த தமிழ் இன உணர்வு, ஐந்தாம் உலகத் தமிழர் பண்பாட்டு மாநாடு ஒரு சர்வதேசிய மாநாடாக இம்முறை றீயூனியனிலும் மிளிரப் போகிறது.

தமிழ் அறியாத – பிரென்சு மொழி பயிலும் மொறிஷியன், றீயூனியன் வாழ் தமிழ் மக்களுக்குத் திரும்பவும் அவர்களது தாய் மொழியாம் தமிழ் மொழியை அறிமுகப் படுத்தவும், தமிழ்க்கல்வியை இரு நாட்களிலும் ஊக்குவிப்பதற்கும் சம்பந்தப்பட்ட இரு சர்வதேசிய மாநாடுகளும் பயன்பட வேண்டும் என்பதே உலகத் தமிழர் பிரார்த்தனையாகும்.

ஆனந்தன்.

---

### மரணம்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவத் துறை விரிவுரையாளர் வைத்தியக் கலாநிதி திருமதி ருஜனி திரணகம அவர்கள், 21 ஆம்திகதி (21-09-89) வியாழன் அன்று, இனம் தெரியாதாவர்களால்ச் சுட்டுக் கொல்லப் பட்டார் என்ற சோகச் சேதி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி வைத்தது. பல்கலைக்கழகத்தில்த் தனது கடமையை முடித்து, வீடு திரும்பும் வழியிலே இந்நிகழ்வு ஏற்பட்டதாக அறியக் கிடக்கிறது.

மருத்துவத்துறை மண்டபத்திலும் பின்னர் பல்கலைக் கழகத்திலும் மக்கள் பார்வைக்கென வைக்கப்பட்ட அன்னரின் பூதவுடலை, பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து ஊர்வலமாக நல்லூரர் வரை எடுத்துச் சென்று, அன்னரின் தாய் தந்தையரின் இல்லத்தில் (நல்லூரில்) ஒப்படைத்தனர். 23-9-89 அன்று பிரேத அடக்கம் நிறைவெய்தியது.

பேராயர் மகாகனம் டி.ஜே. அம்பலவாணர் அவர்கள் மரண ஆராதனையை நடத்தினர். பற்பல பிரமுகர்கள் ருஜனியின் சேவையையும் திறமையையும் பாராட்டிப் பேசினர்.

தாரகை ஒளி:-
ஏழைகூக் குரலுக்குத் தன்செவி யடைப்போன்;
தானுங்கூப் பிடும்போது கேட்கப்பட மாட்டான்.
— நீதிமொழிகள். 21 : 13 —

# எங்கள் கருத்து

## அமைதிக்கு வழியுண்டா?

ஒக்டோபர் மாதம் பிறந்துவிட்டது. ஒக்டோபரை நினைக்கும் போது, ஒக்டோபர்' 87 தான் நம் நினைவுக்கு வருகிறது! அந்தப் பயங்கர மாதத்தை, அந்தக்கோரக் காட்சிகளை நினைக்கும்போதே, இன்றும் நடுக்க முறுதவர்கள் இல்லையென்றே கூறலாம்.

தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணு முகமாக, இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையே ஜூலை'87 இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பின், தமிழர் கண்ட பலன் என்ன? கடந்த இரண்டு ஆண்டுகளாக இறந்த தமிழரின் தொகை, 1983 இனக்கலவரங்களிலும் அதன் பின்னும் இறந்தோரின் தொகையிலும் கூடியதொகை யென்பதே பலரின் கருத்தாகும்.

1987 இல் நடைபெற்றது போலவே, மீண்டும், கடந்த மாதம் பிரச்சனைக் குரியவர்கள் கைச்சாத்திடாத ஒரு உடன்படிக்கை, இலங்கை- இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழரின் அபிலாசைகள் தீர்க்கப்படுமா? என்பது ஒரு கேள்விக்குறியாகவே எழுந்துள்ளது. தமிழர் மீண்டும் மீண்டும் அடக்கி ஒடுக்கப்படுவதைக் காணும் போது, இந் நாட்டின் ஒரு கணிசமான பகுதி அடிமை நிலையில் இருக்கும்போது, மிகுதியானோர் சமாதானமாக வாழ முடியுமா? முடியவே முடியாது என்பதுதான் எமது கருத்தாகும். இது வரலாறு கண்ட உண்மை.

சுதந்திர தாகத்துடன் வீறுகொண்டெழுந்த ஒரு இனத்தை, பலகூறுகப் பிரித்து அடக்கி விடலாமென நமது அரசாங்கம் எண்ணினால், அது தவறான எண்ணம் என்றே நாம் கூறுகிறோம். இன்று, பல பிரிவுகளாகப் பிரிந்து ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டிருக்கும் நமது தமிழ் மக்கள், மீண்டும் ஒன்று சேருவது நிச்சயம். இன்றிராவிடினும் வேறொரு நாள் நிச்சயமாக ஒன்று சேருவார்கள் என்பதை நமது அரசாங்கம் அறிவதுதான் அரசியல் ஞானம். தமிழரின் உள்ளத்திலிருந்து கொழுந்து விட்டெரிந்த சுதந்திரத் தீ, இப்போ... 'நீறு பூத்த நெருப்புப் போல' இருந்தாலும், கூடிய விரைவில் கொழுந்து விட்டெரியும் என்பதில் ஐயமில்லை. தமிழர் இப்பரிதாப நிலையிலிருந்து விடுதலையடைய வேண்டுமென நாம் விடாமல் தொடர்ந்து ஏறெடுக்கும் செபங்கள் வீணுகப் போகாது. எல்லாம் வல்ல இறைவன் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் பேசாமலிருக்கவில்லை.

ஆகவே, இறுதியாக நாம் கூறவிரும்புவது - தமிழர்களுக்காகப் பாடுபடுகிறவர்கள், தமிழரின் நல்வாழ்வுக்காகத் தம்மையே தியாகஞ்செய்து தளராமல் போராடுகிறவர்கள், ஒன்றுபட வேண்டும். ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, பரந்த மனப்பான்மையுடன் பணியாற்றினால், இறைவனின் துணையுடன் நல்ல முடிவை நாம் காணலாம்.

அரசாங்கத்தின் இன்றைய போக்கைக் கவனிக்கும்போது, அவர்கள் இன்னும் தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்ப்பது, தமது தலையாய கடமையெனச் சுத்தமனத்தோடு நினைப்பதாகக் காணவில்லை; இத்தகைய பெரும்பிரச்சனைகளைத் தந்திரத்தினால் தவிர்க்க முடியாது. உண்மை மனம் வேண்டும். சுத்த மனம் தேவை. இதை அரசாங்கம் உணரவேண்டும். நமது மாண்பு மிகு ஜனாதிபதி உணர்வாரென நம்புகிறோம்.

இறைவன் ஒருவரே தமிழர் பிரச்சனையைத் தீர்க்க வல்லவர். அவர் காட்டும் வழியே அமைதிக்குரிய வழி. அந்த வழியைக் கடைப்பிடித்துச் செயலாற்றுவோம் வாருங்கள்.

''நானே வழி - வாய்மை - வாழ்வு.''
உங்களுக்கு அமைதி உண்டாவதாக என்றார் இயேசுபிரான்.

### எமது கடந்த இதழில் ( 29-09-89 ) ஒரு திருத்தம்.

'42 ஆம் ஆண்டு நிறைவு விழா' என்ற தலையங்கத்தின் ஐந்தாம் பந்தியின் இரண்டாம் வரியை-சுண்ணகத்தில் 1983 ஆம் ஆண்டு தொடங்கிய இறையியல்க் கல்லூரி - என்று வாசிக்கவும்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் நற்செய்திப் பணி – பத்தாம் ஆண்டு நிறைவு.

தென் இந்தியச் திருச்சபையின் யாழ் அத்தியட்ச ஆதீனத்தினால், கடந்த காலங்களில் ஆனையிறவுக்கப்பால் செயற்படுத்தப்பட்டுவரும் நற்செய்திப் பணிகளுக்காக, இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனைகள், கிளிநொச்சி வட்டாரத்திலுள்ள கோணாவில் புனித தோமா ஆலயத்திலும், கிளிநொச்சி-கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் ஐப்பசித் திங்கள் 6 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டன.

கோணாவிலில் ஆரம்பிக்கப்பட்ட நற்செய்திப் பணியின் இரண்டாவது ஆண்டு நிறைவினையொட்டி, பரிசுத்த நற்கருணை ஆராதனை, புனித தோமா ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு நடாத்தப்பட்டது. இவ் ஆராதனையை மகாகனம் பேராயர் டி.ஜே அம்பலவாணர் அவர்கள் நடத்தினர். கிளிநொச்சி வட்டார ஆயர் அருட்திரு S. ஜெயநேசன் பாவ அறிக்கை ஜெபத்தையும் பூநகரி ஊழியன் திரு. ஜெறோம் போல் திருப வாக்கியத்தையும் ஆயர் அருட்திரு சூரியகுமார் நற்செய்திப் பாடத்தையும், லித்தானிய ஜெபத்தையும் நடத்தினர்கள். மாங்குள வட்டார ஆயர் அருட்திரு D.S. தியாகராஜா அருளுரையாற்றினர். இந்த ஆராதனையில் ஏறக்குறைய முந்நூறு பேர் கலந்து கொண்டு நன்றி செலுத்தினர்கள். யாவருக்கும் காலை ஆகாரம் அளிக்கப்பட்டது.

கிளிநொச்சியில், நற்செய்திப்பணி ஆரம்பமாகிப் பத்தாவது ஆண்டு பூர்த்தியானதை முன்னிட்டு, பரிசுத்த நற்கருணை ஆராதனையாக நன்றி செலுத்தும் ஆராதனை, பேராயர் டி.ஜே. அம்பலவாணர் அவர்களினால் காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. திருவிருந்திற்கு உதவியாக அருட்திரு S. ஜெயநேசன் அருட்திரு அனுகூலன், அருட்திரு D.S. தியாகராஜா, அருட்திரு சூரியகுமார் ஆகியோர் செயற்பட்டனர். உயிலங்குளம் ஊழியன் திரு அன்ரனி சவிரிமுத்தினால் சங்கீதப் பாடமும், பூநகரி ஊழியன் திரு ஜெறோம் போல் இனால் நற்செய்திப் பாடமும் வாசிக்கப்பட்டது. ஆராதனையின் இறுதியில், கிளிநொச்சி வட்டாரச் சபைகளின் திர்வாக அங்கத்தவர்களும், கிறிஸ்தவ தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்களும் அழைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். அதன்பின், அவர்களின் சேவைகளுக்காகவும், அவர்களுக்காகவும் ஜெபிக்கப்பட்டது. இவ் ஆராதனையில் சலோம் நகர்த் திருச்சபையினாலும், மாங்குளம் திருச்சபையினாலும், வவுனியாத் திருச்சபையினாலும், சமாதானபுரத் திருச்சபையினாலும் சிறப்புப் பாடல்கள் பாடப்பெற்றன.

''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எரிசலேமிலும், யூதே முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள் என்றார்.'' (அப் 1 : 8) இன் வாக்கியத்தின் ஊடாக அருளுரை வழங்கிய யாழ் ஆதீனத்தின் பேராயர் பத்து ஆண்டுகளில் 30 இடங்களில் அதுவும் ஆனையிறவுக்குத் தெற்கால் எமது திருச்சபை பல சேவைகளை ஆரம்பித்து, செயற்படுத்தி வருகிறது. ''தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார். தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்''. ( சங்கீதம்68: 5 6 ) என்றது போல் எமது சேவைகளும் நடைபெறுவதை எடுத்துக் கூறிய பேராயர், ஊழியர்களின் சேவையையும் பாராட்டினர்.

இத் திருவிருந்து ஆராதனையில் அனேகம் பேர் கலந்து கொண்டனர். அவர்களில், ஏறக்குறைய 750 பேர் ஐக்கியத் திருவிருந்தில் பங்குபற்றினர். ஆராதனையின் பின்னர், ஆலய வளாகினுள் கலாநிதி R. போட்டர் அவர்களினாலும், பேராயர் மகாகனம் டி.ஜே அம்பலவாணர் அவர்களினாலும் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து உற்பத்திப் பொருட்கள் விற்பனவும் கண்காட்சி வைபவமும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. கலந்து கொண்ட ஆயிரத்தி ஐந்நூறு பேருக்கும் ஐக்கிய விருந்து உபசரணை, கிளிநொச்சி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. இவ் விழாவுக்கு, யாழ்ப்பாணத்திலிருந்தும் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பல ஆண்டுகளாக, நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலையின் மத்தியிலும், யாழ் ஆதீனத்தின் வேலைகள் சிறந்த முறையிலே 30 இடங்களிற் செயற்படுகிறது என்றால், ஆண்டவர் அருளிய கிருபையும், அதைச் செயற்படுத்தும் ஆற்றல் கொண்ட யாழ் ஆதீனத்தின் பேராயர் அருட்பெருந்திரு டி.ஜே. அம்பலவாணர் அவர்களுமே காரணம்.

## பாடுவோம் எல்லோரும்.

''பாடுவோம் எல்லோரும்'' என்ற ஒரு சிறு கவிதைக் கொத்தை (156 பாடல்கள்) நவாலி Y.M.C.A ஸ்தாபனத்தின் ஊடாக, எம்மவர்க்குத் தொகுத்து அளித்த திருவாளர் W.N. தேவகடாட்சம் அவர்கள் ஓர் பல்கலை நிபுணர் என்றாலும் மிகையாகாது.

இவரைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள் என்றே கூறலாம். இவர் பொதுப்பணிகளிலும், சமயப்பணிகளிலும், சமுகப்பணிகளிலும் முன் நின்று செயல்படும் செயல் வீரன் ஆவார். தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் Y.M.C.A களிலும், கழகங்களிலும் நடைபெறும் பாசறையில், இக் கவிதைக்கொத்து பெரிதும் உதவிபுரியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை எனலாம். ஆனல் இந்நூல் வாசிப்பவர்கள், யுவதிகள் மட்டுமின்றி வளர்ந்தோர் அனைவர்க்கும் ஏற்ற கவிக்கதம்பம் ஆகிறது. இப்பாடல்கள் அனைத்தும் திருவாளர் W.N தேவகடாட்சம் அவர்களின் சொந்த ஆக்கமாகும். தன்னை முற்றுக அர்ப்பணித்து, சமுக சமயப் பொது விடயங்களில், மக்களுடன் மக்களாகத் தன்னைச் சிறுமைப்படுத்திச் சேவை செய்வதிலும் தன், முழு நேரத்தையும் கூட அர்ப்பணிக்கக் கூடியவர். இவர் சேவை அன்றும் இன்றும் என்றும் வளர வேண்டும்.

—ஜெயசீலன்—

## சாதுவுடன் உரையாடல். (முற்றுடர்).

தத்துவ ஞானி: நல்லது இருக்கட்டும். உலகைத் துறப்பதென்றால், அதன் கருத்தென்ன? துறவியாயிருக்கும் நீர், உலகைப் பகைக்கிறீரா? மற்றவரை விட, நீர் உம்மைச் சிறந்தவரெனக் கருதுகிறீரா? நீர் உலகைத் துறந்தது ஏன்?

சாது: விவாதிப்பதில் எனக்கு விருப்பமில்லை. நமது உரையாடல் பரஸ்பரமானதாயிருக்க வேண்டும். நான் உலகைப் பழிக்கிறவனல்ல. பிறரை விட என்னைச் சிறந்தவனாக நான் கருதுவதும் இல்லை. பிறரைப் போல் நானும் குறையுள்ளவன்; நான் பாவி, எனினும் பாவிகளின் நேசர் என்னையும் மீட்டுக் காத்து வருகிறார்.

நான் உலகைத் துறந்ததில்லை. துறக்கவேண்டுமென்ற ஆவலும் எனக்கில்லை. உலகின் தீமையை நான் வெறுக்கிறேன். அதைத்தான் துறக்க முயல்கிறேன் என் ஆன்மீக வாழ்விற்குத் தடையாகவும், இடையூறாகவும் இருக்கும் யாவையும் நான் துறக்க முயலுகிறேன். இது வேயன்றி, நான் உலகில் வாழும் வரை, உலகைத் துறப்பதென்பது கூடியகாரியமல்ல.

உதாரணமாக, ஒரு நகரையோ ஒரு குடியிருப்பையோ விட்டு, காட்டில் வசிக்கச் சென்றாலும், அந்தக் காடும் உலகின் ஒரு பகுதியே. இவ்வுலகமாகிய கூடாரத்தில் நாம் வாழும் வரை, அதைத் துறக்க எண்ணுவது நகைப்பிற்குரிய செயலாகும். உலகின் எப்பகுதியில் நான் வாழ்ந்தாலும், என் உடல், உலகோடு தொடர்பு கொண்டேயிருக்கும். மரணம் வரை, இவ்வியற்கையான தொடர்பை அறுத்தெறிய முடியாது. கடவுளின் திட்டம், நாம் இவ்வுலகிலிருந்து, இயங்கி உயிர் வாழ வேண்டும் என்பது தான். நாம் இவ்வுலகோடு தொடர்பு கொண்டு வாழவேண்டு மென்பதே அவரது திருவுளச் சித்தமாகும். இவ்வுலகப் பொருட்களைச் செம்மையான முறையில் பயன்படுத்தி, அவருடைய விருப்பத்தைச் செய்து, பரமவாழ்வுக்கு நம்மை

( மிகுதி, பக்கம் 3இல் )

## Sports Activities in the Peninsula may soon become a dream of the Past, unless there is a Change of Heart all around.

With all the play fields in the Peninsula deserted, with all the young and the not too young 'keeping away' from these 'maidans', sports activities - inter-club and inter schools' sports competitions - have come to a grinding halt depriving the Jaffna sports addicts from their legitimate share of such 'treat'.

Gone are the days when Jaffna abounded with sports activities throughout the entire year. Gone are the days when Jaffna's numerous sports fans thronged the 'entire perimeter of the play fields. Gone are the days when these 'addicts' converged on these spacious sports arenas to feast their eyes on the sumptious exciting treat dished out by the youth of Jaffna.

It is a sad irony of fate that we have been reluctantly pushed into this state of dormancy unable to venture out and keep the ball rolling. We have been pushed into a state of despondency, much to our chagrin and despair. We have been pushed into a state of uneasy 'numbness' where we could but sit back in studied silence and gloat over our surfeet of sports activities in the not too distant past. We could but relax and recollect in our 'inward eye' the sports achievements of our schools and clubs, the individual brilliance of our past sportsmen, sportswomen and their like, the 'thrillers' and 'cliff hangers' that kept us all rooted to our seats. For a moment, though these activities 'flash in our 'inward eye', thrilling us no ends the very next moment, we are brought down to 'terra firma' to face the harsh realities of the changing times. We are plunged into the abysmal depths of remorse and frustration.

Sports activities in the peninsula may soon become a dream of the past unless there is a change of heart all around.

V. Kiruparaj

## Mr. M. S. Thambithurai.

A Tribute
by
*Dr. Ernest A. Champion.*

Humility is a virtue much sought after but few ever walk this life humble before God and man. It has been my previledge to have known such a one and he died recently. Mr. M. S. Thambithurai was my teacher at St. John's College in the 30's. He will always remain in my sight and now in my memory as a man at whose feet I was previledged to study and to learn about life.

The course of education in Sri Lanka especially in these troubled times has been less than what one would ever wish to see, but what has sustained education at St. John's has been the legacy of integrity scholarship and high ideals that teachers such as Mr. Thambithurai have left. The salaries they were paid then will today be regarded as an insult. However, in spite of the financial burdens, they cultivatd the minds of our children and gave them as an offering to the nation. Those the nation could not use or even sometimes would not use they gifted to the rest of the world as evidenced by the thousands of highly qualified Tamils in high positions in various parts of the world.

The key to good teaching is to acknowledge that any teacher is always a student himself, or herself that the vast expanse of know ledge cannot be comprehended in ones life time. Mr. Thambithurai never pretended to know more than what he did, but what he knew he gave freely to all who came to him. To him there was something sacred about the task entrusted to him and he made no secret that his strength came from his God. For him teaching was a ministry and therefore, the classroom became his Chapel.

Many of his students have achieved high professional and academic successes on paper. They might appear to know more than their teacher. But I am sure I am expressing the sentiments of hundreds of my colleagues when I say in all sincerity that we will all do well to go back and to sit at the feet of our masters in order to re-learn the wisdom of the past. His children should take comfort in what he has been as a father and we his extended family are proud to call him our Guru.

*"Reaching for the stars*
*We stop at the house of moon*
*To re-learn the wisdom of our fathers'*

(THE LAWS... continued)

6. Energy:- Successful, deeply fulfilled people have a high de gree of energy:

7. Humility: Through a humble approach to life, the successful person will learn at an early age to profit from the knowledge of parents and teachers.

8. Pleasing others:- Although it is impossible to please everyone, we will be more productive and successful if we try.

9. Giving:- Successful people give and still give more; their giving is returned to them in full measure.

10. Learning from others:- If we are alert we will be able to learn from each person we meet, avoid mistakes and put new virtues into practice.

11. Joy: True joy comes by serving people in need. Once a novice approached Mother Teresa and cried out in an over joyed manner, 'Mother, for six hours I have been handling the body of Christ'. She meant that she had found a man in the street whose condition was so bad that it took six hours to get him cleaned up comfortable and in bed. She felt that Christ had come to her in the form of that man. Real Joy can never be achieved without the element of usefulness, of serving.

12. Altruism: Every person each in his own place - can make the world a better place. Those who search for happiness and success will find a way. The altruist may make the world a better place because he writes a book. Or because he riases intelligent, compassionate children. Or because he invents a new recipe. Or because his life serves as a shining light to others. There are large and small ways to make the world better, and all paths as different they may be, lead to success. (Adapted from the Templeton Plan).

AT REST:

## Mrs. A. N. Thuraisingam.

We regret to record the death which occurred at the residence of her daughter at Thinnevelly, Jaffna of ALICE NESA MALAR wife of Mr. Luther Thuraisingam, retired government servant of Erlalai south.

Mrs. Alice Thuraisingam was an old girl of Uduvil Girls' College of the Bookwalter era and served as teacher at Union College, Tellippalai for many years. She herself hailed from Tellippalai and the school, during her teaching career was the richer for the influence she had in the village where she was known as "Alice acca" Her devotion to the church which nurtured her was strong and abiding and was reflectep in her conversation with others and in her life and work.

The funeral service was held at the residence of her daughter at Thinnevely. The Rev. Christo Roberts Presbyter of the Tellippalai Church officiated. Associated with him was the Rev. Isaac Selvaratnam, Minister of St. James Church, Nallur, who preached the sermon. Mrs E.T. Rajaratnam, a former Colleague of the deceased at Union College, paid the tribute. The Rt. Rev. D. J. Ambalavanar the Bishop of the J. D. C. S. I. offered the concluding prayer.

The remains were interred at the Tellippalai Church burial grounds.

The deceased leaves behind besides her husband, Mr. Luther Thuraisingham, her only daughter Suja, her son-in-law, her brother Mr. K. Benny Rajaratnam of Uduvil, her two grand children and a very large circle of relations and friends to bemoan her loss.

AT REST:

## Mr. K. Jeyaratnam.

The Funeral Service of Mr. Kathiravetpillai Jeyaratnam of the Araly Church was held on the 8th of September 1989, at the residence of his son, Dr. Preman Jeyaratnam, 3, The Covert, New Castle, Straffordshire.

The Rev. Peter Clarke, officiated at the Service, which included the singing of a Tamil Reading and song. The remains were cremated at the local cemetery and it is hoped that the ashes would be brought to Araly for interment in the near future.

## More Selections From The R. E. B.

### A song of the ascents: for David

LORD, my heart is not proud,
nor are my eyes haughty;
I do not busy myself with great affairs
or things too marvellous for me.
But I am calm and quiet
like a weaned child clinging to its mother.
Israel, hope in the LORD,
now and for evermore. Psalm 131

Who could have believed what we heard?
To whom has the power of the LORD been revealed?

He grew up before the LORD like a young plant whose roots are in parched ground;
he had no beauty, no majesty to catch our eyes, no grace to attract us to him.

He was despised shuned by all, pain-racked and afflicted by disease; we despised him,
we held him of no account, an object from which people turn away their eyes.

Yet it was our afflictions he was bearing,
our pain he endured, while we thought of him as smitten by God, struck
down by disease and misery.

But he was pierced for our transgressions,
crushed for our iniquities;
the chastisement he bore restored us to health
and by his wounds we are healed.

We had all strayed like sheep, each of us going his own way, but the LORD laid on him the guilt of us all. Isaiah 53: 1-6

# DANIEL POOR-THE MISSION, THE CHURCH AND ECUMENISM.

The recent issue of the "WORLD COMMUNIQUE" the Quarterly of the World Alliance of the YMCAs in its 3rd issue for 1989 discusses in its editorial the Ecumenical Task of the YMCA. I quote a very relevant passage from that Editorial.

"When a veteran ecumenical leader was asked whether it is important for YMCAs to be engaged in issues of Christian unity or whether this was not the task of the Church, he answered by giving the example of a work camp. This camp which brought together Christian youth for two weeks, was organised in a setting of extreme poverty and injustice. The youth worked with the people, trying to understand their realities. Each morning they studied the Bible to find guidance on the problems of poverty and injustice. Their experience with the poor and their common search for an answer to the conditions of poverty bound the young people together. They recognised that their own unity was a requisite if they were serious about tackling the issue of poverty. Then came Sunday and each participant went his / her own way when it came to church services: the Methodists to their church, the Anglicans to theirs, the Catholics to theirs and so on. Suddenly the unity was broken. When they came back some raised questions, "Did we all worship different Gods? Why did we have to worship separately? Couldn't we have celebrated the eucharist together? "Painfully the group recognised that they were caught in the scandal of divisions that has plagued the Church for centuries. They resolved that they would in the future consciously shut out any artificial barriers and divisions that separate people and commit themselves to working for Christian unity."

The passage quoted above puts in a nut-shell the grave problems the early missionaries faced and also our own predicament today with fragments of a Church. However, we are grateful that Daniel Poor's vision for unity found fulfilment in two of the Missions he pioneered to establish, namely: the American Ceylon (Jaffna) Mission and later the American Madura Mission. Both these Missions became congregational churches and in the course of time flowered into the Dioceses of Jaffna and Madura of the Church of South India.

To those who belong to the Church of South India, where Tamils, Malayalees, Telugus, Kannadas, Coorgs and Anglo-Indians belonging to the Anglican, Methodist, Congregationalists, Presbyterian, Reformed churches and a few other denominations or traditions have united to form one, undivided Church of Christ, the visible and organic unity of the Church has become a blessed reality, a wholesome and healing experience which has stood the test of time of 42 years already and is accepted with much gratitude and praise by a larger world community of Christians. The unity achieved is certainly not an end itself nor the consummation of the great ecumenical vision, but at least it is a clear road to a greater realisation of Ecumenism in its widest and deepest conceptions. Is it too much therefore for us in this tiny island with an insignificant number of protestant Christians to at least take the first step in Ecumenism of a visible and organic unity of the churches? It is true we have tried hard and failed miserably and remain frustrated, leaderless and worse still vision - less! Let us in humility learn the lessons of unity from those who have experienced it and lift our hearts, minds, spirits, service and scholarship towards that worthy purpose.

*Rajan Kadirgamar,*
*Christian Theological Seminary,*
*Chunnakam.*

OCTOBER MEETING... contd ...

rich voice filled the hall. The catchy choruses she sang soon caught on and she had the whole crowd, the young, the old, and the tinies tapping their toes and clapping their hands and the walls of Otley Hall reverberated with beautiful sounds.

After lunch at the Levi-Spaulding Boys' Home, the women gathered in the Church to greet and to be greeted by Mrs. Moses who spoke on the ecumenical decade for women in solidarity with the church. Dr. Mrs. Ambalavanar the President of the J. D. C. S. I. Women's Fellowship chaired the meeting.

The Public Meeting once again held in the Cathedral had as its speakers the Rt. Rev. Moses and Bishop Ambalavanar.

The Bishop in his message addressing those gathered there urged them to lend a hand in the upliftment of the Church and the society. He then announced the song 'ஒன்றே திருச்சபை என்போம்'' as a song of dedication. The people were then treated to a sumptuous high tea on the Cathedral grounds.

## St. John's Principal Visits Toronto, Canada.

The Toronto St. John's/ Chundikuli Girls College Past Pupils Association hosted a dinner in honour of Dr. E. S. Thevasagayam, Principal St. John's College and Mrs. Daisy Thevasagayam who were on holiday in Canada. The dinner meeting was held on Saturday 2nd September 1989 with more than 75 past pupils and their spouses present. At a meeting that followed the President Mr. Tharmalingam welcomed the Chief Guests. Dr. Thevasagayam then gave a review of the progress of the School and the prevailing conditions.

## Jaffna wells polluted, study reveals.

Jaffna is facing the danger of its well water becoming saline due to the excessive draining of water for plant irrigation. It is therefore essential that there should be a Water Research and Control Board to advise farmers on the extent of land and water that should be used for cultivation, said Prof. Deivendrarajah, Dean of the Faculty of the Jaffna University.

He was speaking on "Water resources and their pollution" at a seminar organised by the Geographical Society at the Jaffna University.

Prof. Deivendrarajah said that indiscriminate use of fertilisers led to the increase in the nitrogen content in water. A sample analysis conducted by him had revealed that the composition of nitrogen in water had increased by three to twenty fold. The excessive nitrogen in water was found to be the contributory factor for anaemia in children and cancer in adults.

It was also found that well water in the area was polluted by human and animal waste. Pollution of water was a haven for the proliferation of bacteria. When one analysed the bacterial composition of water in developed countries with the undeveloped countries, it was found that there was only one bacteria in one millimetre of water.

But the water in Jaffna contained ten thousand bacterias in hundred millimetre of water. It was therefore essential that the wells should be chlorinated periodically, he said.

IN EVER LOVING MEMORY OF

**Miss Dharaka Thambiah**

( Accountant, Lanka Cement Ltd, K. K. S. )

Who died under tragic circumstances on 23rd October 1987 at St. Peter's lane Jaffna.

"Safe in the arms of Jesus"

*Inserted by Lamenting Father & Brothers.*

SECOND DEATH ANNIVERSARY.

In Loving Memory of

**Antenet Arunthathy**

Died: 15 - 10 - 1987.

" ... .. he that believeth in me, though he were dead yet shall he live ".

JOHN: 11 - 25.

Inserted By Lamenting *Father, Mother, Brothers, ( Aruna, & Anusha ) & Friends.*

Alaveddy.

IN LOVING MEMORY of

**Mrs. Vasantharani Indran**

on

Her SECOND DEATH ANNIVERSARY

28-10-89

By her loving daughter Shamala. Parents and Loved ones.

"Formation of Seminarians in spirit of the Gospel - our primary aim."

## Jaffna Seminary Enters Its Tenth Year.

"Inspite of the deteriorating situation in the country - politically, socially and economically- and the consequent killings day in and day out, the seminary was able to survive, thank God, in carrying out its annual programme of work with great satisfaction." Thus observed the Rev. Fr. S. J. Emmanuel, Rector of St. Francis Xavier's Seminary, Columbuthurai, Jaffna, when he presented the Rector's Report at the inaugural session of the 10th Academic Year (1989/90) of the seminary recently.

Earlier His Lordship The Rt. Rev. Dr B. Deogupillai, Bishop of Jaffna was received by the Rector, staff and the students and several priests of the peninsula concelebrated Holy Mass with His Lordship.

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st,Cross Street Jaffna on Friday 6,13, October 1989 and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna